பழனி தாலுக்காவை பின்தங்கிய பகுதியாக அறிவிக்கும் திட்டம்.

292—(* வினா எண் 16241) திரு. என். பழனிவேல் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பழனி தாலுக்காவை தொழில் ரீதியாகப் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க கோரி வேண்டுகோள் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) பழனி வட்டம் தற்போது மாநில அரசின் 15 சதவீத மூலதன மானியத் திட்டத்தின் கீழ் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் துவங்கப்படும் தொழில்கள் அவைகளின் நிலையான மூலதனத்தில் 15 சதவீதம் அல்லது ரூ. 15 இலட்சம் இதில் எந்தத் தொகை குறைவோ அத் தொகையை மான்யமாகப் பெற தகுதி பெறும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி தொகுதியை பின்தங்கிய பகுதியாக அறிவித்து ஓராண்டு காலம் ஆகிவிட்டது. ஆனால், இதுவரையில் அந்த வட்டாரத்தில் புதிதாக எந்தத் தொழிலும் ஆரம்பிக்கப்பட்டதாக தெரியவில்லை, அதற்கான காரணம் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? இதேபோல் சென்ற ஆண்டு தமிழகத்தில் தொழில் துறையின் பின்தங்கிய பகுதி எவை யெவை? அவற்றிற்கு அரசின் மூலம் எந்த அளவிற்கு உதவிகள் செய்யப்படுகின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி தொகுதி பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்ட பின்னாலே புதிய தொழில்கள் எதுவும் ஆரம் பிக்கப்படவில்லையே என்று கேட்டார்கள். கண்டிப்பாக புதிய தொழில்கள் அந்தப் பகுதிக்கு வரும். மாண்புமிகு உறுப் பினர் கூட அந்தப் பகுதிக்கு புதிய தொழில்கள் வர வேண்டும் என்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அந்தப் பகுதி மக்களும் அதற்கு உறுதுணையாக இருப்பார்கள் என்ற வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சென்ற ஆண்டு இத்தகைய அறிவிப்பு வெளியிட்டபோது, கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை, சேலம் மாவட்டத்தில் ராசிபுரம், மதுரையில் பழனி, கோவையில், அவினாசி, நீலகிரியில் குன்னூர் பெரியார் மாவட்டத்தில் தாராபுரம், நெல்லையில் ராதாபுரம், தென்னாற்காடு மாவட்டத்தில் வானூர், புதுக்கோட்டையில் கந்

தர்வ கோட்டை ஆகிய பகுதிகளை பின்தங்கிய பகுதிகளாக அறிவித்து இருக்கிறோம். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, அந்தப் பின்தங்கிய பகுதிகளுக்கான சலுகை, அத்தொழில்களின் நிலையான மூலதனத்தில் 15 சதவீதம் அல்லது ரூ. 15 இலட்சம் இதில் எந்தத் தொகை குறைவோ அத்தொகையை மானியமாகத் தரப்படுகிறது.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, சலுகை அளிப்பதைப் பொறுத்தவரையில் 15 சதவீதம் அல்லது 15 லட்சம் இதில் எந்தத் தொகை குறைவோ அது தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். நான் ஏற்கெனவே கேட்டுக் கொண்டதைப்போல, அங்கே விரைவாகப் புதிய தொழில்களை தமிழக அரசு சார்பாகவே துவக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா? அப்படி பின்தங்கிய பகுதி என்று அறிவிக்கப்பட்ட பின்னாலே, அதற்கு மத்திய அரசிடமிருந்து ஏதாவது சலுகை கிடைக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதிகளுக்கு மாநில அரசின் சலுகைகள் தான் கிடைக்கின்றன. எந்தெந்தப் பகுதிகளில் அரசு சார்பாக தொழில்கள் துவங்க முடியுமோ அந்தந்தப் பகுதிகளில் தொழில் துவங்க அரசு முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறது. அப்படி தொழில்கள் துவங்குகிறபோது ஜாயின்ட் செக்டார் மூலமாகவும், பப்ளிக் செக்டார் மூலமாகவும் தொழில்கள் துவங்கப்படுகின்றன. பின் தங்கிய பகுதிகளில் உள்ள சலுகைகளைப் பயன்படுத்தி புதிய தொழில்களைத் துவங்க தனியார் துறையினரும், பிரைவேட் செக்டாரும் முன் வர வேண்டும் என்பது அரசின் கொள்கை, அந்தப் பகுதிக்கு மத்திய அரசின் சலுகை எதுவும் கிடைப்பதும் இல்லை.

வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை.

293(*வினா எண் —18930) திரு.இல. பலராமன்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு, வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்காக 1981-82, 1982-83, 1983-84 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்த நிலத்தின் விஸ்தீரணம் எவ்வளவு?

(ஆ) ஆலைக்கு வந்த கரும்பு, உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரை அளவு யாது?